**செ.வெ.எண்- 15** **நாள்-11.06.2019**

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தனியார்துறை நிறுவனங்களும் - தனியார் துறையில் பணிபுரிய விருப்பம் உள்ள மனுதாரர்களும் நேரடியாக சந்திக்கும் **"வேலைவாய்ப்பு முகாம்"** ஒவ்வொரு வாரமும் வெள்ளிகிழமை அன்று நடைபெற்றுவருகிறது. 14**.06.2019** அன்று நடைபெறவுள்ள தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் முன்னணி தனியார் துறை நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான நபர்களை நேரில் வருகைப்புரிந்து தேர்வு செய்யவுள்ளனர். இது ஒரு இலவசப்பணியே ஆகும். இதன் மூலம் தனியார் துறைகளில் வேலைவாய்ப்பு பெறுபவர்களுக்கு அவர்களது வேலைவாய்ப்பு பதிவு ரத்து செய்யப்படமாட்டாது.

இத்தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் மகேந்திரா ஆட்டோமொபைல்ஸ், தனலெட்சுமி சிட்பன்ஸ் மற்றும் L&T பைனான்ஸ் நிறுவனங்களுக்கு தேவையான Sales Man, Technician, Marketing Manager, மற்றும் Marketing Executive ஆகிய பணியிடங்களுக்கு பத்தாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு, தொழிற்கல்வி டிப்ளமோ, மற்றும் பட்டப்படிப்பு முடித்தவர்கள் ஆண்கள் மற்றும் பெண்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர்.

எனவே, இப்பணியிடங்களுக்கு தகுதியும், விருப்பமும் உள்ள நபர்கள் அனைவரும் வருகின்ற **14.06.2019** அன்று (வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணிக்கு அரியலூர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு வருகைபுரிந்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**